மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) சேலம் உருக்காலை ஆலோசனைப் பொறியாளர்களான தஸ்தூர் கம்பெனியார் மத்திய அரசுக்குத் தொழில் நுணுக்கப் பொருளாதார விவர அறிக்கை ஒன்றை 1971 நவம்பரில் சமர்ப்பித்துள்ளனர்.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. என். கே. பழனிசாமி : அதில் உள்ள முக்கியமான சிபார்சுகள் என்ன என்பதைச் சர்க்கார் சொல்ல முடியுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சிபார்சுகள் என்பது மட்டுமல்ல, சேலம் தொழிற்சாலையில் எந்த பிராடக்ட் மிக்ஸை உற்பத்தி செய்தால் லாபத்தோடு நடத்த முடியும் என்பது போன்ற விவரங்களையெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். இவைகளெல்லாம் மத்திய அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கின்றன.

திரு. என். கே. பழனிசாமி : சமீபத்தில் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் சாதனங்களைச் செய்வதற்கு உத்தேசம் இருக்கிறதா. அப்படியானால் எப்படிச் செய்ய உத்தேசம் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : முதல் கட்டமாக ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் உற்பத்தி செய்ய வேண்டும் என்று மத்திய அரசு தெரிவித்திருக்கிறது. அது எப்படி என்ற விவரம் என்னிடம் இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : தஸ்தூர் அறிக்கையை அப்படியே மத்திய அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளதா, அல்லது வேறு ஒரு அறிக்கை தயார் செய்து கொண்டிருக்கிறதா ? சேலம் இரும்பு ஆலை உற்பத்தியைத் தொடங்குவதற்கு வரமுடியாத அளவுக்கு எந்த விதமான வேலையும் ஆரம்பிக்காமல் தாமதம் ஏற்படுவதற்கு என்ன காரணம் என்பதை அரசு தெரிவிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தாமதம் எதுவும் இல்லை என்று அடிக்கடி மத்திய அரசு சொல்லி வந்திருக்கிறது. தஸ்தூர் அறிக்கையைப் பொறுத்த அளவுக்கு ப்ராடக்ட் மிக்ஸைக் குறித்து வேறுபட்ட கருத்துக்கள் இருந்தன. என்ன பிராடக்ட் மிக்ஸை நாம் சேலம் இரும்பு ஆலையில் கொண்டுவந்தால் லாபமாக நடத்த முடியும் என்று அவர்கள் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார்கள். அதைத் தவிர வேறு காலதாமதம் இருப்பதாகத் தெரியவில்லை.

*42 வினா—**திரு. கே. ஏ. வகாப் :** மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் உருக்காலை திட்டத்திற்காகத் தமிழ்நாடு அரசு மத்திய அரசுக்கு இதுவரை எத்தனை ஏக்கர் நிலம் ஒதுக்கியுள்ளது ?

1972 ஆகஸ்ட் 10]

மாண்புமிகு திரு. செ. மாதவன்: விவர அறிக்கை @ ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. கே. ஏ. வகாப்: தலைவர் அவர்களே, நம்முடைய மாநில அரசு இவ்வளவு இடங்களைக் கொடுத்திருந்தும் பத்திரிகைகளிலே மத்திய அமைச்சர்கள் கூறியதாக வருகிற செய்திகளைப் பார்க்கிறபொழுது, நம்முடைய மாநில அரசு நிலம் கொடுக்காத காரணத்தினால் தாமதப்படுவது போலவும், வேறு பல காரணங்கள் இருப்பது போலவும் கூறியிருக்கிறார்களே, அப்படி யில்லை என்பதற்கு விளக்கம் தருகின்ற முறையில்,—இன்னும் அவர்கள் கேட்ட இடங்களைக் கொடுக்காமல் இருப்பதுபோல் கூறியிருக்கிறார்களே—அது உடனடியாக நிவர்த்திக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இவ்வளவு அதிகமான நிலங்களை எடுத்துக் கொடுத்திருக்கும்பொழுது மத்திய அரசோ அல்லது அதனுடைய அமைச்சர்களோ நிலமே இல்லை, ஒரு செண்டுகூட நிலம் இல்லை என்று சொல்வார்கள் என்று நான் நம்பவில்லை. அப்படி மத்திய அமைச்சர்கள் அல்லது மத்திய அரசு பேசுகிறார்களோ என்ற நோக்கத்தோடு பத்திரிகைகளில் போடாமல் இருந்துவிட்டால் இப்படிப்பட்ட பிரச்னை எழாது என்று கருதுகிறேன். என்னைப் பொறுத்தவரையில், எந்த மத்திய அமைச்சரும் மாநில அரசு எதுவும் செய்யவில்லை என்று சொல்லியிருப்பார்கள் என்று நம்பத் தயாராக இல்லை.

தொழில் அனுமதிக்கான விண்ணப்பங்கள்

* 43 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1971 வரை லைசென்ஸ் வழங்கப்படாமல் மத்திய அரசு கால தாமதம் செய்யும் தொழில்கள் எத்தனை?

(இ) அவைகளின் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: 165 விண்ணப்பங்கள் 1971-ம் ஆண்டு வரை மத்திய அரசால் உரிமம்/இசைவுக் கடிதங்கள் வழங்கப்படாமல் உள்ளன.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: 1971-ம் ஆண்டுக்குப் பிறகு இதுவரை அவைகளில் எத்தனை அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றன என்பதை அறியலாமா?

@ 244–248 -ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.